பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 15 ஞாயிற்றுக்கிழமை 28.04.2024 கதிர் 172

# மீண்டும் போராட்டத்தில் குதிக்கிறது பல்கலை. கல்விசாரா ஊழியர் சங்கம்

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மீண்டும் தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட கல்விசாரா ஊழியர்கள் தீர்மானித்துள்ளதாகஅனைத்துப்பல்கலைக் கழகங்களில் கல்விசாரா தொழிற்சங்க கூட்டுக்குழு தெரிவித்துள்ளது.

அனைத்துப்பல்கலைக்கழகங்களில் கல்விசாரா தொழிற்சங்க கூட்டுக் குழுவின் இணைத்தலைவர் தம்மிக்க பிரியந்த விடுத்துள்ள அறிவிப்பில்

2016ஆம் ஆண்டு கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தில் 15 சதவீதம் குறைக்கப்பட்டிருந்தது. இந்த சம்பளப் பிரச்சினையை நிவர்த்திக்குமாறு கோரி கடந்த காலங்களில் பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தந்தை செல்வாவின் நினைவு தினம் நேற்று திருகோணமலையில் நடந்தது. பெரும்எண்ணிக்கையிலான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்நிகழ்வில்தமிழ்அரசுக்கட்சியின் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர். அந்த மேடையில் நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் உரையாற்றினார்.

தந்தை செல்வாவின் இயல்பு பற்றி அங்கு குறிப்பிட்டதன் மூலம் கட்சியில் சிலரை மறைமுகமாக ஒரு பிடி பிடித்தார் என்றுதான் சொல்லவேண்டும். அதிலும்குறிப்பாக ''ஒற்றுமை ஒற்றுமை'' என்று கோசம் போட்டுத் திரிபவர்களுக்குத் தந்தை செல்வாவின் மூலம் ஒரு குட்டு வைத்தார். கொள்கைக்காக கட்சிக்குள் அணிகளைப் பிரிப்பதை தந்தை செல்வாவே செய்திருக்கிறார் என்றும் போட்டுடைத்தார். ஒற்றுமை அல்லகொள்கையே முக்கியம்என்று தந்தை செல்வா நின்றார் என்பதைக் கூறியதன் மூலம் கட்சியின் இன்றையவழக்குப்பின்னணிகளை நியாயப்படுத்தினாரோ தெரியாது, ஆனால் அதை அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டார்.

☞ 2

## சஜித் விளக்கம்

ஈரான் நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்காக இடம்பெற்ற இரவு விருந்தில் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கலந்து கொள்ளாமை குறித்து அரச சார்பு ஊடகங்களில் வெளியான செய்திகளை தாம் வன்மையாக கண்டிப்பதாக எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டதாக சில ஊடகங்களில் வெளியான பொய்யான செய்திகளுக்கும் அதேபோன்று அமெரிக்காவின் தலையீட்டினால்அந்தவிருந்துபசாரத்தில் பங்கேற்பதை பிரேமதாச தவிர்த்தார் என்கின்ற செய்திகளுக்கும் சஜித் பிரேமதாச பதிலளித்துள்ளார்.

அரச ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிடுகின்றன. இது கண்டிக்கத்தக்கதாகும்.

பெரிய நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள் வரும் போது அவர்களுக்கு விருந்துபசாரத்தில் எதிர்கட்சி தலைவர் உள்ளிட்ட பிரதான அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றமை வழமையானது.

☞ 2

## அமெ. ஆய்வுக் கப்பலுக்கும் இலங்கைக்குள் நுழைய தடை

பல்கலைக்கழக மாணவர்கள்குழுவொன்றுடன் அமெரிக்க ஆய்வு கப்பல் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்க ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எந்தவொரு ஆய்வுக் கப்பலும் பிரவேசிக்கஅனுமதிக்கப் போவதில்லை என்ற கொள்கைத்தீர்மானத்தின் அடிப்படையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

கடல் எல்லையை பயன்படுத்தாது, எரிபொருள், நீர் சுத்திகரிப்பு, உணவுமற்றும்ஏனைய வசதிகளைபெறுவதற்காக அமெரிக்கஆய்வுக்கப்பல் இலங்கைத் தீவுக்குள் பிரவேசிக்க அனுமதி கோரியது. சர்வதேசகடல் எல்லைக்கே சென்று அந்த வசதிகளை வழங்குவதற்கு இலங்கை தீர்மானித்துள்ளது.

அமெரிக்க கப்பல் சென்னை துறைமுகத்திற்குள் பிரவேசிக்க அனுமதி கோரிய போதிலும் அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சீன ஆய்வுக் கப்பலான ஷியான் யாங் கப்பலின் வருகையை அடுத்து பிராந்திய ரீதியிலான பதற்றம் ஏற்பட்டிருந்தது. இதனைத்தொடர்ந்து இலங்கை அடுத்த ஒருவருடத்துக்கு

☞ 8

## செம்மணி கிரிக்கெட் மைதானத்தால் கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கும்

### ஐங்கரநேசன் எச்சரிக்கை

செம்மணியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அயற்பிரதேசங்கள் மாரியில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும், கோடையில் கடும் நீர்ப்பஞ்சத்துக்கு ஆளாகும் அபாயமும் நேரிடும் என்று தமிழ்த் தேசியப்பசுமைஇயக்கத்தின் தலைவர்பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

☞ 8

## நாணய நிதியத்தின் 3ஆம் தவணை கடன் ஜூன் மாதத்தில் கிடைக்கும்

### அமைச்சர் ஷெஹான் எதிர்பார்ப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கடன் தவணை ஜூன் மாதத்தில் நாட்டிற்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்மேலும்

☞ 8

## மறுசீரமைப்புக்களிலிருந்து பின்வாங்குவது இலங்கையை மீள ஸ்திரமாற்றதாக்கிவிடும்

### மத்திய வங்கி மீண்டும் எச்சரிக்கை

இலங்கையின் பொருளாதார மீட்சியானது இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்களின் தொடர்ச்சித் தன்மையிலேயே தங்கியிருக்கிறது. எனவே ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள மற்றும் தற்போதுநடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முக்கிய மறுசீரமைப்புக்களிலிருந்து பின்வாங்குவதானது, நாட்டை பொருளாதாரத்தை ஸ்திரமற்ற நிலையின் எல்லைக்குக் கொண்டு செல்லும்என இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

2023ஆம்ஆண்டின் 16ஆம்இலக்கஇலங்கை மத்தியவங்கிச்சட்டத்தின் 80ஆம் பிரிவின்படி 2023ஆம்ஆண்டுக்கான பொருளாதார மீளாய்வு அறிக்கை மற்றும் 99ஆம் பிரிவின்படி கடந்த ஆண்டுக்கான மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் என்பன இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவினால்

☞ 2

## நல்லவர் வல்லவரான ரணில் வெல்லவேண்டும் பொது வேட்பாளர் தோற்றுப்போன வழிமுறை

### அமைச்சர் டக்ளஸ் சாடல்

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக வைத்திருந்துஅரசியல்ஆதாயம் தேடுவோரின்விருப்பமே தமிழ் பொதுவேட்பாளரைநிறுத்தும்முயற்சி என்று தெரிவித்துள்ளார் மீன்பிடித்துறைஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

ஒப்பீட்டளவில் வல்லவராகவும் நல்லவராகவும் தன்னை நிரூபித்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை தமிழ் மக்களின் வெற்றியாக மாற்றும் வகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்பாடுகள் அமைய வேணடும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர்கள்மற்றும்முக்கியஸ்தர்களுடன்அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இனைத் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரங்கள், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சு சார்ந்தமுன்னெடுப்புக்கள் போன்றவை தொடர்பிலும், அவை சரியான முறையில் மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு அரச அதிகாரிகளுக்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் வகையில் குறித்தகலந்துரையாடல் அமைந்திருந்தது.

இதன்போது, ஜனாதிபதி தேர்தலில் ரணில்விக்கிரமசிங்கவை வெற்றியடைய செய்ய வேண்டிய அவசியம் தொடர்பாகவலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ்

☞ 2

## பொருளாதார மீட்சி தொடர வேண்டுமா? மக்களேதான் முடிவுசெய்யவேண்டும்

### ரணில் தெரிவிப்பு

தற்போது முன்னெடுக்கப்படும்பொருளாதார மீட்சிக்கானபணிகளைத் தொடர்வதா இல்லையா என்பதை மக்களேதான் முடிவுசெய்யவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச ரோட்டரி கழகத்தின் 3220 மாவட்டத்தின் இலங்கை - மாலைதீவு மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேசமாநாட்டுமண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய

☞ 2

## ஜப்பான் அயலுறவு அமைச்சர் மே மாத ஆரம்பத்தில் வருகிறார்

ஜப்பான்அயலுறவுத் துறை அமைச்சர் யொகோகமிகவாஎதிர்வரும் மே மாதம் 2 அல்லது 3ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வபயணமாகமேற்கொண்டுஇலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஏற்கனவே ஜப்பான் முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஹயாஷி யொஷிமஸா

☞ 8

## பெரமுனவின் ஒழுக்கத்தை மீறிய 6 எம்.பிக்கள் பற்றி விசாரணை

கட்சியின் ஒழுக்கத்தைமீறிஐக்கியமக்கள் சக்தியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதாக பொது ஜன பெரமுன தெரிவித்துள்ளது.

கட்சியின் ஒழுக்காற்றுக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில், பேராசிரியர்

☞ 2

## வெப்பம் இன்னும் அதிகரிக்கும்

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளில் தற்போது நிலவும் கடும் வெப்பநிலை இந்த மாதத்தின் இறுதி நாட்களிலும் (28, 29, 30) அடுத்த மாதத்தின் நடுப் பகுதிவரையும், குறிப்பாக மே மாதம் 12ஆம் திகதி வரை தொடரும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவிச் சரிதவியல் விரிவுரையாளரும் வானிலை ஆய்வாளருமான பிரதீபராஜா தெரிவித்தார். இந்தக் காலப் பகுதியில் வெப்பநிலை தற்போது உள்ளதைவிட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது:

வெப்ப அலைச் சுட்டெண்ணின் ஆபத்தான வகைப்பாட்டுக்குள் நாம் இருப்ப

☞ 8

## இனி இது .....

அவர் அந்தக் கூட்டத்தில் பேசியதாவது:

தந்தை செல்வநாயகம் சென்தோமஸ் கல்லூரியில் கற்பிக்கும் வேளையிலே சகோதரனின் உடல்நிலை கருதி விடுமுறை கோரியபோது அதிபர் மறுத்தமையால் அன்றைய தினமே இராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறினார்.

அதன்பின்புவெஸ்ரிகல்லூரியில் அவர் பணியாற்றும்போது ஆங்கிலேயர் ஆட்சியில் வேட்டி சால்வை அணிந்து பணியாற்ற முடியாது என்றபோது அங்கும் வேலையை இராஜினாமா செய்துவிட்டு வெளியேறினார்.

அனைவரும் இணைந்து செல்வோமே என நினைத்தவர் அல்லர் தந்தை செல்வா. அவரது அரசியல்அணுகுமுறையும்அவரது தனிப்பட்ட குணாதிசயத்துடன் ஒத்ததாகவே இருந்தது. இல்லையென்றால், 1947 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தால்அழைத்து வரப்பட்டு காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட வைக்கப்பட்டார் வெற்றியீட்டினார். எனினும், நாடாளுமன்றம் வந்து ஓரிரு ஆண்டுகளிலேயே பொன்னம்பலம் தலைமையில் பொன்னம்பலம் அணி எனவும், உப தலைவர் செல்வநாயகம் தலைமையில் செல்வா அணி எனவும் இரண்டாகப் பிரிந்தது.

பிரியவேண்டும்என்பதற்காகத் தந்தை செல்வா பிரியவில்லை, பிரஜாவுரிமைச் சட்டத்தை அன்றைய இலங்கைத் தலைவர் டி.எஸ்.சேனாநாயக்க அறிமுகப் படுத்தியபோது அது தீங்கானது, அதனை ஆதரிக்க முடியாது, 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த இலங்கை - இந்தியக் காங்கிரஸ் அந்த உறுப்பினர்களின் பிரஜாவுரிமையே அற்றுப்போகும் விதமாக அந்தச்சட்டம்இயற்றப்பட்டு கொண்டு வந்தபோது அதனை எதிர்க்கவேண்டும் எனக் கட்சிக்குள்ளேயேவாதாடினார். கட்சி அதற்கு அனுமதிகொடுக்கவில்லை. இதனால் கொள்கையின்நிமித்தம் கட்சியை இரண்டாகப் பிளந்தார்.

101 பேர் இருந்த நாடாளுமன்றத்தில் 6 பேர் கொண்ட கட்சியில் இருந்து 3 பேர் அதற்கு எதிராக வாக்களித்தனர். கட்சி இரண்டாகப் பிரிந்தது. ஒற்றுமை என்ற கோஷத்துக்காகத் தவறைச் செய்ய அவர் விரும்பவில்லை. ஒற்றுமை அல்ல, கொள்கையே முக்கியம்,எங்களுடையநிலைப்பாடு முக்கியம், எதற்காக மக்களுக்காக எழுந்து நிற்கின்றோம் என்பது முக்கியம், அதைச் செய்யத் துணிந்தார்.

1949 ஆம் ஆண்டு புதிதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை அவர் ஆரம்பித்தார். வருட ஆரம்பத்தில் மாவிட்டபுரத்தில் மாவை. சேனாதிராஜாவின்வீட்டுக்குஅருகிலே கட்சியின் அங்குரார்ப்பணம் நடந்தது. எனினும், டிசெம்பரில் கொழும்பில்தான் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வை உத்தியோகபூர்வமாக அவர் நடத்தினார். அதற்கு முன்னர் கட்சியைத் தொடக்குவதற்கான பல முஸ்தீபுகள் இடம்பெற்றபோது அதைக் கற்கலால் எறிந்து குழப்பினார்கள், அடித்துத் துரத்தினார்கள். இவையெல்லாம் யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்றன.

அதனால்தான் 1949ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு- மருதானையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்தார்.

பிடித்த கொள்கையில் அவர் உறுதியாக இருந்தார். அந்த வழியைத் தன்னுடைய மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் அவருக்குத்தெரியும். 3ஆண்டுகளில் இடம்பெற்றதேர்தலிலேபோட்டியிட்டு தோல்வி கண்டார்.

தமிழ் அரசுக் கட்சி சார்பில் கோப்பாயில் வன்னியசிங்கமும், திருகோணமலையில் இராஜவரோதயமும்மட்டுமேவெற்றியீட்டினர். முதல் தேர்தலிலேயே தமிழ் அரசுக் கட்சியை வெற்றிகொள்ள வைத்த பெருமிதம் திருமலைக்கு உண்டு. ஆனாலும், கட்சி தோல்வியடைந்தது.

மக்கள் தனது கொள்கையைப் புறக்கணித்து விட்டார்கள் என அவர் விட்டுவிடவில்லை. அந்தத் தேர்தலிலே காங்கேசன்துறைத் தொகுதியில் தான் தோற்றபோது அவர்நீதிமன்றிலேவழக்குஒன்றைத் தொடுத்தார். தேர்தல் வெற்றி தவறானது, முடிவு தவறானது எனத் தானே வாதாடி வழக்கொன்றைத் தொடுத்தார். அந்த வழக்கிலேயும் அவர் தோற்றார். தோற்றது மட்டுமன்றி அன்று வழக்குச் செலவாக 40 ஆயிரம் ரூபாவையும் அவர் கட்ட வேண்டியும் இருந்தது. அதையும் செய்தார்.

ஆனால், 1956 ஆம் ஆண்டில் இருந்து இளையவர்களையும், புதியவர்களையும் கட்சிக்குள் சேர்த்தார். வேட்பாளர்களாக நிறுத்தியவர்கள் எல்லாம் 30 வயதுக்கும் குறைந்தவர்கள். பெரு வெற்றி கண்டார். அதற்குப் பிறகு இன்று வரைக்கும் அவர் வகுத்த சமஷ்டிக் கொள்கைக்குத் தமிழ் மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ச்சியாக வாக்களித்து வருகின்றார்கள். ஆகவே, அவரது அரசியல் அணுகுமுறையை அறிந்திருப்பதுஅல்லதுபின்பற்றுவது அத்தியாவசியம்.

இந்தவிடயத்திலேதந்தைசெல்வா சொன்ன இரண்டு விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன். இதே மண்ணிலே தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது மாநாடு 1951ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது தந்தை செல்வாவின் பேருரையில் சொன்ன ஒரு வாசகம், "ஓர் இனம் அழியாமல்இருப்பதற்குப்பலஏற்றம் தேவை. ஒன்று அந்த இனத்தின் எண்ணுத்தொகை குறையாமல் இருப்பது. இரண்டாவது அந்த இனம் வசிக்கும் பிரதேசம் பறிபோகாமல் இருப்பது."

இந்தத் தீவிலே எங்கள் இனம் அழியாமல்இருக்கவேண்டுமானால் நாம் எண்ணிக்கை குறையாமல் இருக்கவேண்டும், நாம் வதியும் பிரதேசம் பறிபோகாமல் இருக்கவேண்டும். அப்படிச் செய்வதாகஇருந்தால்நாம்வசிக்கும் பிரதேசத்தில் ஆட்சிமுறை மாற்றம் ஏற்படவேண்டும் என்று அவர் தனது சமஷ்டி கொள்கையை முன்வைத்தார்.

1956ஆம் ஆண்டிலேயே தனிநாட்டுக் கோரிக்கை எழுந்து விட்டது. அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் அதை முன்வைரைத்தார். ஈழம் என்று பெயர் கொடுத்தவரே அவர்தான். ஆனால், தந்தைசெல்வாஅதைஅந்தவேளை ஏற்கவில்லை. தொடர்ச்சியாகப் பலர் தனியாகப்பிரிந்துபோவதுதான்ஒரே வழியெனக் கூறியபோதும் அவர் அதனை ஏற்கவில்லை. 1960ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி தமிழ அரசுக் கட்சியின் செயற்குழு கூடியபோதுவவுனியாவைச்சேர்ந்த சிற்றம்பலம்தனிநாடுதான்ஒரேவழி என்றதீர்மானத்தைமுன்வைத்தார். அப்போது தந்தை செல்வா, "இது வன்முறையில் முடியும். ஆயுதப் போர் பிரச்சினையைத் தீர்க்காது" என்று கூறி அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவிடவில்லை.

11ஆவது மாநாடு உடுவிலே கட்சியின்வாலிபர்முன்னணியினர் வந்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் எனச் சொன்னபோது அவர்களுக்கு அறிவுரை கூறி அதனை நீங்கள் முன்மொழியவேண்டாம், இதனை நான் எதிர்த்தவன் அல்லன், இது எமது மக்களுக்குப் பாதகமாக முடியும் எனக் கூறி அதனையும் தந்தை செல்வா தடுத்தார்.

1970ஆம்ஆண்டுத்தேர்தலிலே வி.நவரட்ணம் சுயாட்சிக் கழகத்தை உருவாக்கி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலிலே போட்டியிட்ட போது இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைப்பவர்களிற்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் சொல்லியிருக்கின்றோம்.

அதே தந்தை செல்வா 1972 ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு தொகுக்கப்பட்டபோது மாற்று யாப்பை முன்வைத்தார். சமஷ்டி அடிப்படையிலே அந்த யாப்பு இருந்தது. எமது வெள்ளி விழா மலரிலும் அது இருக்கின்றது. அந்த யாப்பிலே பல விடயங்களை அவர் கோரியிருந்தாலும் இறுதியிலே எமது கட்சியின் சார்பில் வி.தர்மலிங்கம் 5 பிரேரணைகளை (நாடாளுமன்றத்தில்) முன்வைத்தார். அனைத்தும் பெரும்பான்மை வாக்குகளால்தோற்கடிக்கப்பட்டபோது தந்தை சொன்னார், ''இனி, நாளையில் இருந்து நாம் இங்கே வர மாட்டோம். நாம் வெளிநடப்புச் செய்து இதனை ஒரு நாடகமாக மாற்ற விரும்பவில்லை. ஆனால், நாளையில் இருந்து நாம் இங்கு வரமாட்டோம்" -என்று சொன்னார்.

அதனைத் தொடர்ந்து இராஜினாமா செய்தார். இடைத்தேர்தலும் இரண்டரை ஆண்டுகள்இடம்பெறாமல்இருந்தது. 1975ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடைத்தேர்தலிலே அவர் பெருவெற்றியீட்டினார். அதன் பிறகுதான் தமிழர் கூட்டணி உருவாக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி வட்டுக்கோட்டை தனிநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், "எமது கட்சி தனிநாடு ஒன்றை நிறுவ முனைகின்றது. இது இலேசான காரியம் அன்று, வில்லங்கமானது என்பதை நாம் அறிவோம்'' என்று அதனை விவரித்துச் சொல்லிவிட்டு, எமது நடவடிக்கை சாத்வீகமானது எனச் சொன்னார்".

சுமந்திரனின் உரை இவ்வாறு இடம்பெற்றது. அவர் ஒற்றுமை என்ற பெயரில் தந்தை செல்வா சேரக்கூடாதவர்களோடுசேரவில்லை என்றுசொல்லிக்கொண்டிருந்தபோது கூட்டத்தின் முன் வரிசையில் அமர்ந்திருந்துகேட்டுக்கொண்டிருந்த கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரன் அடுத்த ஓரிரு நிமிடங்களில் அங்கிருந்து எழுந்து வெளியேறிச் சென்றார். தான் வெளியே செல்வதற்கான காரணத்தைக் கூறிவிட்டுத்தான் அவர் சென்றார் என்பதை காணொலியில் பார்த்து ஊகிக்க முடிந்தாலும், ஏற்கனவே தனக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான பிளவு நிரந்தரமாகி இருப்பதாக உணர்கின்றேன் என்று கூறியவர் சுமந்திரனின் உரையின்போது இடைநடுவிலேயேமுன்வரிசையில் இருந்துஎழுந்துசென்றதுஅனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

ஆக மொத்தத்தில் தந்தை செல்வாவின் பெயரால் கட்சிக்குள் இழுபறிகள்இன்னும்தொடரும்என்பதற்குக் கட்டியங்கள்கூறப்பட்டுள்ளனஎன்றே எனக்குப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும் நடவடிக் கைகள் எடுக்கப்படவில்லை.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி கலந்துரையாடப்பட்டது. இதன்போது, எமது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எமக்கு அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு மேலும் அழுத்தத்தை வழங்கும் வகையில், அனைத்துபல்கலைக்கழகங்களிலும் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

தொழிற்சங்க போராட்டம் மே மாதம் 2 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் இதனால் பல்கலைக்கழகத்தின்செயற்பாடுகள் தடைப்படலாம் என்றார்

## நல்லவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவானந்தா, தமிழ் பொது வேட்பாளரைதேர்தலில்நிறுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பான விமர்சனத்தினையும் முன்வைத்தார்.

அதாவது, 'தமிழ் மக்கள் எதிர்கொள்ளும்பிரச்சினைகளையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாக பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காக தமிழ்மக்களைஇன்னுமொருமுறை பலிக்கடாவாக்க முனைகிறார்கள்.

இவ்வாறான முட்டாள்தனமான முயற்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப்போராட்ட குழுக்களினாலும் மிதவாததமிழ்தலைமைகளினாலும் பலமுறை முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அவற்றினால் எமது மக்களுக்குஎந்தவிதநன்மைகளும் கிடைக்கவில்லை. மாறாக மீளமுடியாத பின்னடைவுகளையே ஏற்படுத்தியிருந்தன.

எனினும், நடைமுறை சாத்தியமானசிந்தனையோ, சரியான வேலைத்திட்டத்தினை முன்வைத்து அதற்காகஉழைக்கும்குணாம்சமோ இல்லாதவர்கள், எமது மக்களை உணர்ச்சியூட்டும் தோற்றுப்போன வழிமுறையையே மீண்டும் கையில் எடுத்து தம்மை அரசியலில் நிலைநிறுத்த முனைகிறார்கள்.

ஆனால், ஈ.பி.டி.பி. ஆகிய நாங்கள், எமது மக்களுக்கு சரியான வழியைகாட்டுகின்றதனித்துவமான தரப்பு என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி தேர்தலை கையாள வேண்டும்.

மக்கள் எதிர்கொள்ளுகின்ற அன்றாடப் பிரச்சினைகள் முதல் அபிவிருத்தி உள்ளடங்கலான அரசியல்தீர்வுவரையிலானமூன்று 'அ' க்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகளை முன்வைக்க கூடிய ஒருவராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு விடயங்களில் அவை நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு நாம் கட்டி வளர்த்துள்ள தேசியநல்லிணக்கமும்கணிசமான பங்களிப்பை செய்திருக்கிறது.

எனவே, அடுத்த ஜனாதிபதி தேர்தல்என்பதுதமிழ்மக்களையும் வெற்றியின் பங்காளர்களாக அடையாளப்படுத்தும் வகையில் எமது செயற்பாடுகளும் மக்களுக்கானதெளிவுபடுத்தல்களும்அமைய வேண்டும்.

அதன்மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை அடைவதற்கான வழியை பிரகாசமாக்க முடியும்' என்று தெரிவித்தார்.

## சஜித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரானிய அதிபரின் இரவு விருந்துபசாரத்தில் நான் கலந்து கொண்டதாகவே அல்லது கலந்துகொள்ளாமைக்காக கூறும் காரணங்களோ தவறானவை. அவை திரிவுபடுத்தப்பட்டே வெளிப்படுத்தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவருக்கு விருந்துபசாரத்தில் பங்கெடுக்கஅழைப்புவிடுக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்து அதில் தகவல்கள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சேர, சோழ, பாண்டிய, பல்லவ காலத்திலிருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும்இடையில்நெருங்கிய பிணைப்பு காணப்படுகிறது. அந்த பிணைப்புடன் தொடர்ந்தும் முன்னோக்கிபயணிக்கவேண்டும். இந்தியாவைப் போன்று டிஜிட்டல் மயமாக்கலுடன்அபிவிருத்தியடைய வேண்டும்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கின்றோம். கொழும்புமற்றும்திருகோணமலை துறைமுகங்கள் இந்தியாவின் முதலீட்டுக்காக காத்திருக்கின்றன.

தற்போது சிலர் இலங்கையின் எதிர்காலத்துக்கான திட்டம் குறித்து என்னிடம் கேள்வி எழுப்புகின்றனர். அடுத்த 5 வருடங்களுக்கான நிலையான திட்டம் எம்மிடம் உள்ளது.

அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மக்கள் சிந்தித்து சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும். நாம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே முன்னுரிமை அளிப்போம். மாறாக நிறைவேற்றதிகாரத்தை இல்லாதொழிப்பதற்கல்ல.

இந்தியாவுடனான தொடர்புகள் மீள்புதுப்பிக்கத்தக்கசக்திபரிமாற்றம் மற்றும் கல்வி என்பவற்றின் மூலம் புதுப்பிக்கப்படுகின்றன. அதற்கமைய கண்டியில் சென்னை ஐ.ஐ.டி. பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு தீர்மானித்தமைக்கு இந்தியாவுக்கு நன்றி கூறுகின்றோம். இது தவிர குருணாகல், சீதாவாக்கை மற்றும் கொழும்பிலும் மேலும் 3 புதிய பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவுள்ளன. கல்வியை டிஜிட்டல் மயப்படுத்துவதன் ஊடாகவும் எம்மால் வேகமாக வளர்ச்சியடைய முடியும்.

நாம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளோம். அவற்றை வெற்றிகரமாகக் கடந்துள்ளோம். பரிஸ் கிளப் மற்றும் சர்வதேச பிணைமுறிஉரிமையாளர்களுடன் மறுசீரமைப்பு குறித்த பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. அவற்றை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். அவை நிறைவடைந்தால்சர்வதேசநாணய நிதியத்தின்சகலநிபந்தனைகளையும் நிறைவேற்றிவிடுவோம். அதன் மூலம் நெருக்கடிகளிலிருந்து முழுமையாக வெளிவரத் தொடங்கலாம்.

சிங்கப்பூர், மலேசியா, வியட்நாம் போன்ற நாடுகளைப் போன்று நிலையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தி அவற்றை பின்பற்ற வேண்டும். இந்தியா, சீனா மற்றும் அமெரிக்காவைப் போன்று ஏற்றுமதி சந்தைகளை பரவலாக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு உற்பத்தி பொருளாதாரத்தில் அதிகஅவதானம்செலுத்தவேண்டும்.

நாம் உலகில் சிறிய தீவாகக் காணப்படுகின்ற போதிலும், பிராந்தியபொருளாதாரத்தின்கேந்திரமாகவே உள்ளோம். எனவேதான் எமது துறைமுகங்களை விரிவாக்குமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

சுற்றுலாத்துறையை மேலும் மேம்படுத்தவேண்டியசவாலையும் நாம் எதிர்கொள்ளவேண்டும். 2019ஆம் ஆண்டு 16 சதவீதமாகக் காணப்பட்டவறுமைநிலைதற்போது 26 வீதமாக உயர்வடைந்துள்ளது. விவசாயத்தை நவீனமயப்படுத்தி உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் ஊடாக இதனைக் குறைக்க முடியும். அதன் அடிப்படையிலேயே சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளோம். அத்தோடு இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துள்ளோம்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நாம் முறையாக நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கின்றோம். அவற்றை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதா அல்லது இந்த இடத்திலேயே இருப்பதா அல்லது முன்னோக்கிப் பயணிப்பதா என்ற கேள்வியை மக்கள் முன் வைக்கின்றேன். அவர்களே இறுதி தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றார்.

## பெரமுனவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.எல்.பீரிஸ், கலாநிதி நாலக கொடஹேவா, டிலான் பெரேரா, வசந்த யாப்பா பண்டார, கலாநிதி உபுல்கல்பத்தி, கே.பி.எஸ்.குமாரசிரி ஆகியநாடாளுமன்றஉறுப்பினர்கள் தொடர்பிலேயே விசாரணை நடத்தவுள்ளதாகபொதுஜனபெரமுன தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்களின் நியாயப்படுத்தலை கடிதம் மூலம் கேட்டறிந்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பேராசிரியர் பீரிஸ் தலைமையிலான பொதுஜன பெரமுனவின் 6 உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன்கடந்த 5 ஆம்திகதி ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பெயரில் உடன்படிக்கைசெய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மறுசீரமைப்புக்களி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டன.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் முகங்கொடுத்த மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து கடந்த ஆண்டு குறிப்பிடத்தக்களவிலானமீட்சியைக் காண்பித்தது. அரசாங்கத்தினாலும், மத்திய வங்கியினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட வலுவான கொள்கை சீராக்கங்களும், கட்டமைப்பு மறுசீரமைப்புக்களும் பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# வென் ஈயின் தாக்கம் சடுதியாக அதிகரிப்பு

## கிளிநொச்சி மாவட்டத்தில்





தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் வென் ஈ தாக்கம் மிகவும் சடுதியாக அதிகரித்து காணப்பட்டுள்ளதாக இதன் காரணமக தேங்காயின் உற்பத்தியும் கூறைவடைந்து காணம்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

அதற்கமைவாக வெள்ளிக்கிழமை கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான தென்னை அபிவிருத்திச் சபையில் முகாமையரளர் வைகுந்தன், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பகுதியில் வென் ஈ பாதிப்புக்கள் ஏற்பட்ட பகுதிகளை நேரில் சென்று வென் ஈ தாக்கம் மிக சடுதியாக அதிகரித்து காணப்பட்டுள்ளதுடன் நாளாந்தம் பயன்படுத்தும் தண்ணீர் முதல் கொண்டு வீட்டில் பயன் தரக்கூடிய வகையில் இருந்த அனைத்து செடி கொடிகளிலும் வென் ஈ தாக்கம் மிக சடுதியாக அதிகரித்து காணப்படுவதை அவதானிக்கமுடிந்தமை குறிப்பிடத்தக்க விடயம் அத்துடன் ஊடகங்களுக்கு இப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெண் ஈ தொடர்பாக கருத்துக்கள் வழங்கினார். தென்னையின் பல பகுதிகளில் இக்காலப் பகுதியில் கடும் வரட்சி காணப்படுவதன் காரணமாக வென் ஈ தாக்கத்தின் காரணமாகவும் தென்னைகளில் தேங்காயின் விலை தொடர் மிகவும் சடுதியாக அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதன் காரணமாக தென்னை செய்கையாளர்கள் மிகுந்த அவதாரத்துடனும் தென்னைக்கு அதிகளவான நீரை பாச்சுவதன் மூலமாகவும் தென்னை மரங்களை முடிந்தவர்கள் தண்ணீரில் கழுவிடுவது ஓரளவாவது தென்னைக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்க முடியும் எனவும் அத்தோடு கடுமையான மழை கிடைக்குமாயின் வென் ஈ தாக்கம் முற்றும் முழுதாக அழிந்துவிடும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் தெரிவிக்கையில் வென் ஈ தாக்கம் ஏற்பட்டுள்ள தேங்காய்கள் (தொழுடன்) முழுமையாக வேறு பகுதிக்கு கொண்டு செல்வது மற்றும் வென் ஈ தாக்கம் ஏற்பட்டுள்ள தென்னையின் ஓலைகளை வேறு பகுதிக்கு கொண்டு செல்வதை முற்று முழுதாக பண்ணையாளர்கள் தென்னை செய்கையாளர்கள் கைவிட வேண்டும் எனவும் அதன் ஊடாகவும் வேறு பகுதிக்கு வென் ஈ பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளனதாகவும் உங்கள் பகுதிகளில் வென் ஈ தாக்கம் அதிகரித்து காணப்பட்டால் அருகில் உள்ள கமநல சேவை திணைக்களத்தில் தொடர்பு கொண்டு உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வென் ஈ தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கான முறைகளையும் நேரில் வந்து உங்களது தென்னை செய்கையை பார்வையிட்டு அதற்கான தீர்வையும் பெற்றுத்தருவதற்கு காத்திருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தென்னை செய்கையாளர்கள் அருகில் உள்ள கமலநல சேவை திணைக்களத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் தென்னச்செய்கைக்கு ஏற்பட்டுள்ள வெண் ஈ முற்று முழுதாக ஒழிக்க வேண்டுமாயின் கூட்டாக தென்னை செய்கையாளர்கள் சேர்ந்து தென்னையில் ஏற்பட்டுள்ள வெண் ஈ தடுக்கும் முறையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (05 - 113)

# பொலிசாரால் மூவர் வவுனியாவில் கைது







வவுனியா கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு சென்ற பெண்ணிடம் கைவரிசை காட்டிய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

வவுனியா, சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வீதி ஊடாக கடவுச் சீட்டு அலுவலகத்திற்கு கடந்த 17 ஆம் திகதி அதிகாலை பெண் ஒருவர் தனது குழந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற போது, குறித்த வீதியில் முகத்தை மூடி துணிகளால் கட்டியபடி நின்ற மூன்று இளைஞர்கள், குறித்த பெண்ணை வழிமறித்து அவருடைய குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்ததுடன், குறித்த பெண்ணின் மோட்டார் சைக்கிளையும் பறித்து சென்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திஸாநாயக்கா, திலீப், திசரட்ட பொலிஸ் கானடபிள்களான உபாலி , தயாளன் , இரேசா கொண்ட குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். இவ் விசாரணைகளின் போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சிதம்பரபுரம் (வயது 35), மதவுவைத்தகுளம் (வயது 35), சிறிராமபுரம் (வயது 34) ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 3 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அபகரிக்கப்பட்ட மூன்று அரைப் பவுண் நகைகள் உருக்கப்பட்ட நிலையில் யாழில் உள்ள நகைகடை ஒன்றில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. பறித்து செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் கனகராயன்குளம் பகுதியில் விற்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதைவிட இரண்டு பென்ரன் மற்றும் லப்டொப் என்பனவும் குறித்த மூவரிடம் இருந்து மேலதிகமாக மீட்கப்பட்டுள்ளது. இவை கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து திருடப்பட்டவை என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த மூவரையும், சான்றுப் பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05 - 100)

# போர்க் காலத்தில் நிறுத்தப்பட்ட பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

## குருமண்வெளி துறையில் மக்கள் மகிழ்ச்சி







மட்டக்களப்பு மாவட்டத்தின் குருமண்வெளி துறையிலிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வரை சேவையில் ஈடுபடும் விதமாக இலங்கை போக்குவரத்து பஸ் சேவையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதிக்கும் எழுவாங்கரைப் பகுதிக்குமான பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாக குருமண்வெளி - மண்டூர் படகுப் பாதை இடம்பெற்று வருகிறது.

இந்த படகுப்பாதையில் பயணம் செய்யும் பிரயாணிகள் மட்டக்களப்புக்கு செல்வதாயின் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் அதிக செலவு செய்து போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து அப்பகுதி மக்கள் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் முன்வைத்த கோரிக்கைக்கிணாங்க, அவரது முயற்சியால் குருமண்வெளி துறையிலிருந்து மகிழூர், எருவில், கிராமங்களூடாக மட்டக்களப்பு வைத்தியசாலை வரை இந்த பஸ் சேவை முன்னெடுக்கப்படுவதற்காக இலங்கை போக்குவரத்து சேவையொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் போக்குவரத்து சேவையின் ஆரம்ப நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன், இலங்கை போக்குவரத்து சபையின் அதிகாரிகள், அப்பகுதி பொதுமக்கள் எனப் பலரும் இணைந்திருந்தனர்.

கடந்த யுத்த காலத்தின் போது இந்த பஸ் சேவை முன்னெடுக்கப்பட்ட போதிலும், பின்னர் அது நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் அப்பகுதி மக்களும் குருமண்வெளி - மண்டூர் படகுப் பாதையை பயன்படுத்திவரும் பிரயாணிகளும், விவசாயிகளும் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் தற்போது இப்போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளதோடு, இச்சேவையை ஏற்படுத்திக் கொடுத்த இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர். (05)

# ரயில் நிறுத்தமுன் ஏறமுயன்ற இரண்டு பெண்கள் படுகாயம்

## கொழும்பில் சம்பவம்



கொழும்பில் வெள்ளிக்கிழமை பயணித்துக்கொண்டிருந்த ரயிலில் ஏற முயன்ற இரண்டு பெண்கள் ரயிலின் இரண்டு பெட்டிகள் நடுவில் சிக்கி படுகாயமடைந்துள்ளனர்.

கண்டி நோக்கி பயணிப்பதற்காக ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு வந்துகொண்டிருந்தவேளை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவ்வேளை இரண்டு பெண்கள் ரயிலில் ஏற முயன்று இரண்டு பெட்டிகள் நடுவில் சிக்குண்டுள்ளனர். உடனடியாக ரில் நிறுத்தப்பட்டு அவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெற்றன.

மீட்கப்பட்ட இருவரும் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஓய்வு பெறுவதின் அவசியம்

தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவருமான இரா. சம்பந்தன் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதில் இருந்து விலகி இருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவரது உடல் நிலையைக் கருத்தில்கொண்டு இந்த விடுமுறை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்ததில் இருந்து தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களை வழிப்படுத்தும்பொறுப்பைச்சுமந்தவர் இரா.சம்பந்தன். தனது காலத்தில் அதற்காக அவர் கடுமையாக உழைத்தார் என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ் மக்களின் போராட்டம் மீதிருந்த உலக நாடுகளின் பார்வையைமாற்றுவதற்கும்தமிழர்களின்பிரச்சினை அரசியல் பிரச்சினை, ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தாலும் தமிழர்களின் அரசியல் பிரச்சினை இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதை உலகுக்கு உணர்த்துவதற்கும் அவர் பெரும் பாடுபட்டார்; அதில் கணிசமான வெற்றியையும் பெற்றார்.

தன்னுடைய காலத்திற்குள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுத் தந்துவிடவேண்டும் என்பதிலும் அவர் உத்வேகமாக இருந்தார். அதற்காக உச்சபட்ச விட்டுக்கொடுப்புகளுக்கும் அவர் தயாராகவே இருந்தார். தன் மக்களிடம் இருந்து கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிந்தபோதும், சிங்கக் கொடியைக் கையில் ஏந்தினார். ரணிலின் புதிய அரசமைப்பு முயற்ச்சியின்போது, சமஷ்டிக்குப்பதில் ஒற்றையாட்சி என்று குறிப்பிடப்படுவதை அனுமதித்தார். (பெயரில் எதுவும் இல்லை. எமக்குத் தேவையான சமஷடிக் கூறுகள் அதில் இருந்தால் சரி என்று வாதிட்டார்) இப்படித் தன்னாலான அனைத்து விட்டுக் கொடுப்புகளுக்கும் இணங்கி ஒரு தீர்வைக் கண்டுவிடவேண்டும் என்பதில் குறியாக இருந்தார். ஆனால், சிங்களத் தலைமைகளால் அவர் ஏமாற்றப்பட்டார். அவர்கள், குறிப்பாக இன்றைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவரை ஏமாற்றினார்.

இப்போது சம்பந்தனின் வயது மூப்புக் காரணமாக அவர் தளர்ந்துவிட்டார். நாடாளுமன்றத்திற்கு வருகை தருவதோ அங்கு உரையாற்றுவதோ இப்போது அவரால் முடியாத காரியமாகிவிட்டது. வயது மூப்பின் காரணமாக அவர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டும் வருகிறார். அதன் காரணமாகவே அவருக்கு 3 மாத கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தன் தன்னுடைய காலத்தில் தமிழ் மக்களுக்குச் தன்னால் இயன்றளவிற்கு சேவை செய்துள்ளார். இப்போது அவருக்கு ஓய்வு அவசியம். நாடாளுமன்ற அமர்வுகளில் இருந்தல்ல, அரசியலில் இருந்தும் அவர் ஓய்வுபெறவேண்டிய காலம் இது.

தன் பின்னால் இருப்பவர்களுக்கு இடமளித்து அவர்களைமுன்னால்நகர்த்தி அவர்களிடம் அரசியல் பொறுப்புக்களை அவர் கையளிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. தமிழ் மக்களுக்காக அவர் போதியளவிற்கு சேவையாற்றிவிட்டார் என்பதால் அவர்களும் அவருக்கு ஒய்வை வழங்குவதற்குத் தயாராகவேண்டும். இயலாமைக்குமத்தியில் அவரை வருத்துவது அழகல்ல. அதேபோன்று இனிவரப் போகும் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஒருவரை மக்களுக்கு அடையாளம் காட்டிவிட்டு சம்பந்தரும் ஓய்வுபெறுவது காலத்தின் தேவை.




# அமெரிக்காவை ஆட்டிப் படைக்கும் டிக்-டாக்

சு. வெங்கடேஸ்வரன்

தகவல் தொழில்நுப்பத்தின் வளர்ச்சி மனித வாழ்க்கையை பல்வேறு நிலைகளில் மிகவும் இலகுவாக்கியுள்ளது. அதே நேரத்தில் இத்தொழில்நுப்பம் தவறாகப் பயன்படுத்தும்போது பெரும் சிக்கல்களும் ஏற்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. அந்த வகையில் இன்று நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நவீன தொழில்நுப்பத்தின் தலைப்பிள்ளையான சமூக ஊடகங்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தகவல்கள், புகைப்படங்களை பரிமாறிக் கொள்வதில் தொடங்கி பல்வேறு தரப்பினரும் பணம் ஈட்டும் இடமாகவும் யூடியூப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக ஊடகங்கள் திகழ்கின்றன. அதே நேரத்தில் இதுபோன்ற செயலிகள் தேசிய அளவில் பிரச்னைகளை உருவாக்கும் இடமாகவும் திகழ்கின்றன.

அந்த வரிசையில் சீனாவின் டிக் டாக் செயலி அமெரிக்காவுக்கு பெரும் தலைவலியாக இப்போது உருவெடுத்துள்ளது. டிக் டாக் செயலி அதனைப் பயன்படுத்தும் அமெரிக்கர்களின் தனிப்பட்ட தகவல்களை திருடுகிறது. மேலும், சீன அரசுக்கு எதிரான தகவல்களை தங்கள் செயலியில் பரவவிடாமல் முடக்குகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆண்டு இறுதியில் நடைபெற இருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் சீனா தலையிட இச்செயலியைப் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்று அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு எச்சரித்துள்ளது.

இதன் காரணமாகவே அமெரிக்க நிறுவ னத்திடம் டிக் டாக் செயலியை அதன் சீன உரிமையாளரான பைட்டான்ஸ் நிறுவனம் விற்றுவிட வேண்டும் அல்லது டிக் டாக் தடை செய்யப்படும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு அதிபர் ஜோ பைடனும் உடனடியாக கையொப்பமிட்டு ஒப்புதல் வழுங்கியுள்ளர்.

இந்த விஷயத்தில் அமெரிக்காவைவிட இந்தியா முன்யோசனையுடன் நடந்து கொண்டது. கடந்த 2020-ஆம் ஆண்டே இந்தியாவில் டிக் டாக் உள்பட பல சீன செயலிகள் ஒரே நேரத்தில் தடை செய்யப்பட்டன. அப்போது இந்தியாவில் சுமார் 20 கோடி பேர் டிக் டாக் பயன்படுத்தி வந்தனர்.

இந்திய, சீன ராணுவ வீரர்கள் இடையே எல்லை மோதல் ஏற்பட்டு பலர்உயிரிழந்த நேரத்தில் நேரத்தில் டிக் டாக் தடை செய்யப்பட்டதால், இந்தியாவின் சிறப்பான பதிலடி நடவடிக்கையாகவும் அது கருதப்பட்டது. சீன செயலிகளை தடை செய்யும் அரசின் முடிவுக்கு மக்களின் ஆதரவும் இருந்தது. அப்போது இந்தியாவின் நடவடிக்கையை முதல் ஆளாக வரவேற்ற அமெரிக்கா, இப்போது தங்கள் நாட்டில் அதனைத் தடை செய்ய தயாராகி வருகிறது. இந்தோனேசியா பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பிரான்ஸ், டென்மார்க், கனடா, பெல்ஜியம் உள்ளிட்ட பல நாடுகளும் டிக் டாக் செயலிக்கு தடை, கட்டுப்பாடுகளை ஏற்கெனவே விதித்துள்ளன.

இந்தியாவுடன் ஒப்பிடும்போது அமெரிக்காவில் பேச்சு, கருத்து சுதந்திரத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே, இந்தியாவில் பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து சீன செயலிகளை ஒரே உத்தரவில் மத்திய அரசு தடை செய்ததுபோல அமெரிக்காவில் தடை செய்ய இயலவில்லை. அதற்கான சட்டவிதிமுறைகளைப் பின்பற்றியும், கால அவகாசம் கொடுத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

மறுபுறம் அமெரிக்க டிக் டாக் பயனாளர்கள் டிக் டாக் தடை செய்யப்படக் கூடாது என்று சமூக வலைதளங்களில் பிரசார இயக்கத்தையும் நடத்தி வருகின்றன. அமெரிக்க நிறுவனத்திடம் டிக் டாக் செயலியை விற்பது என்பது சாத்தியமற்கவே உள்ளது. ஏனெனில், டிக் டாக் செயலியின் வெற்றிக்கு முக்கியக் காரணமாக உள்ள அதன் அல்கோரிதம் (தரவு பகுப்பாய்வு, தன்னியக்க சிந்தனை உள்ளிட்வற்றின் தொகுப்பு) தொழில்நுப்த்தையும் அமெரிக்க நிறுவனத்துக்கு விற்றாக வேண்டும்.

ஆனால், இந்த விற்பனைக்கு சீன அரசின் ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாகும். சீன அரசு இந்த ஒப்புதலை அளிக்கும் என்பதை எதிர்பாக்கவே முடியாது. ஏனெனில், இது அமெரிக்காவிடம் சரணடைவதற்கு ஒப்பானது என்றே சீன அரசு கருதும்.

இதுபோன்ற அரசியல் தொழில்நுப்பம் சார்ந்த சிக்கல் ஒருபுறம் என்றால் மறுபுறம் டிக் டாக்கை தடை செய்வது அமெரிக்காவில் பொருளாதாரரீதியாகவும் பலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில், கைப்பேசி செயலிகளை நம்பி கடைவிரித்துள்ள பல அமெரிக்க சிறு தொழில் நிறுவனங்கள் டிக் டாக் செயலி மூலம்தான் பல நூறு கோடி வருவாய் ஈட்டி வருகின்றன.

சுமார் 34 கோடி மக்கள்தொகையைக் கொண்ட அமெரிக்காவில் 17 கோடி பேர் வரை டிக் டாக் பயன்படுத்துகிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்டோர் 24 வயதுக்கும், 89 சதவீதம் பேர் 45 வயதுக்கும் உள்பட்டவர்கள் ஆவர். அமெரிக்காவில் பல்வேறு பொருள்களை விளம்பரப்படுத்துவது, வாங்குவது, பயன்படுத்திவிட்டு கருத்து தெரிவிப்பது என பல்வேறு பொருளாதாரச் செயல்பாடுகளிலும்

(10ஆம் பக்கம் பார்க்க...)

# கிளி. மாவட்ட பங்கு ஆலயங்களுக்கு 50 வருடங்களின் பின் மடுமாதா வருகை









50 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள பங்கு ஆலயங்களுக்கு மடு அன்னையின் திருச்சொஷரூப பவனி அமோக வரவேற்புடன் உச்ச பாதுகாப்புடன் வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் தருமபுரம் சவேரியர் ஆலயத்தில் மக்கள் ஆசிக்காக மடு அன்னையின் திருச்சொருபம் வைக்கப்பட்டது. இதன்போது பெருமளவிலான மக்கள் மடு அன்னையின் ஆசிரியை பெற்றனர. (05 - 113)


## குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு அரச உத்தியோகத்தர்களுக்கான புதிய கட்டடம் ஆளுநர் செந்திலால் திறப்பு











கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கென சகல வசதிகளும் கொண்ட புதிய கட்டடத் தொகுதி வெள்ளிக கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருகோணமலையில் திறந்துவைக்கப்பட்டு, அரச உத்தியோகத்தர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் செந்தில் தொண்டமானின் 241மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்கள் தங்களின் பணிகளை உரிய முறையில் முன்னெடுக்க தங்களுக்கு போதுமான இட வசதிகள் இல்லை எனவும், தங்களுக்கு தளபாட வசதிகளுடன் கூடியதொரு கட்டடத்தொகுதியை கட்டமைக்கும் பணிகள் பொருளாதார நெருக்கடியால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதால் அக்கட்டடத்தை நிர்மாணித்துத் தருமாறு ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

அக்கோரிக்கையின் பிரகாரம், ஆளுநர் செந்தில் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டில் இந்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது. (05)



## மறுசீரமைப்புக்களி...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துவதற்குப் பெரிதும் பங்களிப்புச்செய்தன. நெருக்கடி மேலும் தீவிரமடையாமல் தடுப்பதற்கும், பொருளாதாரத்தை நிலையான மீட்சிப்பாதையில் முன்கொண்டுசெல்வதற்கும் இத்தகைய நடவடிக்கைகள் அவசியமாக இருந்தன.

பொருளாதார மறுசீரமைப்பு செயற்றிட்டமானது கடந்த ஆண்டிலேயே நம்பிக்கைக்குரிய பெறுபேறுகளைத் தந்திருக்கின்றது. 2022ஆம் ஆண்டில் மிக உயர்வான மட்டத்தில் பதிவான பணவீக்கம், கடந்த ஆண்டின் இறுதியில் ஒற்றை இலக்க மட்டத்துக்குக் கொண்டுவரப்பட்டு, நாணயக்கொள்கை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குப் பங்களிப்பு செய்தது.

தொடர்ந்து 6 காலாண்டுகளாக பதிவான பொருளாதார சுருக்கம் முடிவுக்கு வந்து, 2023இன் இரண்டாம் அரையாண்டில் பொருளாதார வளர்ச்சி பதிவானது. அரச வரவு, செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டு நடைமுறைக்கணக்குபற்றாக்குறை என்பன சீரடைவதற்கான அறிகுறிகள்தென்பட்டன. 2022இல் மிக மோசமான சரிவைச் சந்தித்த வெளிநாட்டுக்கையிருப்பு 2023இல் மீளக்கட்டியெழுப்பப்பட்டது. இத்தகைய முன்னேற்றங்களை அடுத்து 2023 மற்றும் 2024ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபாவின் பெறுமதி உயர்வடைந்தது.

2023இன் இரண்டாம் அரையாண்டில்அவதானிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியானது சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயற்திட்டத்தின் கீழான தொடர் மறுசீரமைப்புக்களால் உந்தப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடரும்என எதிர்பார்க்கின்றோம்.

வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு அதிகரித்தல், வெளிநாட்டு நிதி உட்பாய்ச்சல்கள் இயல்புநிலைக்குத் திரும்புதல், அரசாங்கத்தின் வெளிநாட்டுப்படுகடன் சொத்துப் பட்டியல் மறுசீரமைப்பு பூர்த்தியடைதல் என்பவற்றின் ஊடாக வெளிநாட்டுத்துறை உறுதிப்பாடு தொடர்ந்து தக்கவைக்கப்படுமெனவும் நம்புகின்றோம்.

எது எவ்வாறெனினும் இலங்கையின் பொருளாதார மீட்சியானது இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புக்களின் தொடர்ச்சித்தன்மையிலேயே தங்கியிருக்கின்றது. எனவே ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளமற்றும்தற்போதுநடைமுறைப்படுத்தப்பட்டுவரும் முக்கிய மறுசீரமைப்புக்களிலிருந்து பின்வாங்குவதானது, நாட்டை பொருளாதாரத்தை ஸ்திரமற்ற நிலையின் எல்லைக்குக் கொண்டுசெல்லும் என்றுமத்தியவங்கிஎச்சரித்துள்ளது.

## அமெ. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்த நாட்டின் ஆய்வுக்கப்பல்களையும் தனது கடற்பகுதிக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிப்பதலில்லை என்ற அறிவிப்பைச் செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செம்மணியில் சர்வதேசத் தரத்திலானதுடுப்பாட்டமைதானத்தை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ளஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

செம்மணி உப்பளப்பகுதி குடாநாட்டின் பிரதான கடல் நீரேரிகளில் ஒன்றான உப்பாற்றுக் கடல் நீரேரியை அண்டிய தாழ்வான ஈரநிலம் ஆகும். வெளிப்பார்வைக்கு முக்கியத்துவமற்றவெட்டவெளியாகத் தென்படும்இப்பகுதிசூழலியல்ரீதியாக இன்றிமையாத பங்களிப்புகளை வழங்கிவருகிறது. மாரியில்சுற்றயல் கிராமங்களில்இருந்துவரும்வெள்ள நீரைத்தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தைப் பேணுவதோடு, நிலம் உவராவதையும்தடுக்கிறது. கூடவே, மேலதிக நீரைக் குடாநாட்டின் இன்னுமொரு கட ல்நீரேரியான யாழ்ப்பாணக்கடல்நீரேரிவழியாகக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கவும் செய்கிறது.

அபிவிருத்தி முதலீட்டாளர்களின் வசதிகளையும் நலன்களையும் மாத்திரமே கருத்திற் கொள்வதாயின் அது நிலைபேறானதாக ஒருபோதும் அமையாது. அபிவிருத்தியில் சுற்றுச்சூழலினதும, அது சார்ந்த சமூகத்தினதும், நலன்கள் முன்னுரிமை பெறும்போதே அது நீடித்த-நிலையான-அபிவிருத்தியாக அமையும். அந்த வகையில் யாழ் நகரின் நுழைவாசல் என்பதற்காக மாத்திரமேசெம்மணியில்துடுப்பாட்டமைதானத்தை அமைப்பதற்கு முற்படுவது எவ்வகையிலும் ஏற்புடையது அல்ல. இதனை இதுவரையில் அபிவிருத்திகள் எதனையும் காணாத தீவகத்தின் பகுதிகளில் ஒன்றில் நிறுவுவதே சாலச்சிறந்ததுஆகும்என்றும்தெரிவித்துள்ளார்.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்,

அடுத்த கடன் தவணைக்குரிய இரண்டாவது கடன் மீளாய்வை இலங்கை நிறைவு செய்துள்ளது. குறித்த மீளாய்வின் அடிப்படையில், ஊழியர் மட்ட இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிறைவேற்றுக் குழுவின் இணக்கப்பாடுவழங்கப்படாதுள்ளது.

அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு முழுமைப்படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் சில காணப்படுகின்றன.

சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளஇணக்கப்பாட்டை ஒப்பந்தமாக மாற்றுவது இதில் முக்கியமான நிபந்தனையாகும் சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வது மற்றைய நிபந்தனையாகக் காணப்படுகிறது.

## வெப்பம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 30.04.2024க்கு பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பகல் பொழுதின் அதிகூடிய வெப்பநிலை 40 பாகை செல்சியஸுக்கு மேலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்காலத்தில் உணரக்கூடிய வெப்பநிலையின் அளவு உண்மையான வெப்பநிலையை விடவும் உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்துக்களின் பஞ்சாங்கத்தின் அடிப்படையில் காண்டாவனம் அல்லது அக்கினி நாள்/ அக்கினி நட்சத்திரம் என்பது எதிர்வரும் 04.05.2024 சனிக்கிழமை முதல் 28.05.2024 செவ்வாய்க்கிழமை வரை நிலவும் என குறிப்பிடப்படுகிறது. (காண்டாவனம்/அக்கினி நாள்/அக்கினி நட்சத்திரம் என்பது பரணி நட்சத்திரத்தின் 3ஆம், 4ஆம் பாதங்களையும் (கால்), கார்த்திகை நட்சத்திரத்தின் அனைத்து பாதங்களையும், ரோகிணி நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தையும் சூரியன் கடக்கும் நாட்களே ஆகும்).

கடந்த சில நாட்களாக இரவு பொழுது வளிமண்டல சாரீரப்பதனின் அளவு உயர்வாக உள்ளது. இது எதிர்வரும்நாட்களில் மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எமது உடல் அசௌகரியமான நிலைமையை உணரும் வாய்ப்புண்டு.

தற்போதுவடக்குமற்றும்கிழக்கு மாகாணங்களின் ஆவியாக்க அளவு உயர்வாக உள்ளது. இது மேலும்அதிகரிக்கும்வாய்ப்புள்ளது. எனவே,எமதுநீர்ப்பயன்பாட்டினை வினைத்திறனாக மேற்கொள்வது சிறந்தது.

எதிர்வரும் 27, 28, 29 மற்றும் 30ஆம் திகதிகளில் வட மாகாணத்தின் சில இடங்களில் பிற்பகலுக்கு பின்னர் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எனினும், இம்மழை அதிகரித்த வெப்பமான வானிலையை தணிக்க போதுமானதல்ல.

எனவே, இக்காலப்பகுதியில் பாடசாலைகளில் மாணவர்களின் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளை தவிர்ப்பதுடன், நோயாளர்கள், வயதானவர்கள், விசேட தேவையுடையவர்கள் பகல் பொழுதுகளில் பிரயாணங்களை தவிர்ப்பது சிறந்தது என குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*கடந்த ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி அவரது பதவிக் காலத்தில் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.*

*அதன்போது கொழும்பிலுள்ள அயலுறவு அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டு ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், அனைத்து கடன்வழங்குனர் நாடுகளையும் உள்ளடக்கிய வெளிப்படைத்தன்மை வாய்ந்த கடன்மறுசீரமைப்பு செயன்முறையின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், அதில் மேலும் முன்னேற்றத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார்.*

*இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் மேமாத தொடக்கத்தில் இலங்கைக்குவருகைதரவுள்ள அமைச்சர் யொகோ கமிகவா, மே மாதம் 4ஆம் திகதி இங்கிருந்து நேபாளத்துக்குப் பயணமாகவுள்ளார்.*

*அவரது இலங்கைப் பயணத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட உயர்மட்டப்பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை நடத்துவார் எனவும், இலங்கையின் பொருளாதார மீட்சி, கடன்மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.*

*அத்தோடு கொழும்பு துறைமுக நகரத்திற்கும் கண்காணிப்பு பயணம் மேற்கொள்வார் என்றும் தெரியவருகின்றது.*

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# வவுனியா புதிய பஸ் நிலையத்தின் மலசலகூடத்தால் மக்கள் அவதி





வவுனியா புதிய பஸ் நிலையத்தில் பொது மக்கள் பாவனைக்காக இருக்கும் இரண்டு தொகுதி மலசலகூடங்களும் சீரான முறையில் இல்லை என்பதுடன் இதில் ஒரு தொகுதி மலசலகூடம் பாவனையில் இல்லாமல் தேசிய போக்குவரத்து அதிகாரசபையினர் பூட்டி வைத்துள்ளனர்.

வவுனியா புதிய பஸ் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களைக் கடந்த பின்னரும் இன்றுவரை பஸ் நிலையம் நகரசபையின் கீழ் கொண்டுவரப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பஸ் நிலையத்தின் நிர்வாகக கட்டமைப்பு தேசிய போக்குவரத்து அதிகாரசபையினரின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இன்றுவரை உள்ளது.

இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளும் இதுவரை எந்த ஒரு குரலையும் கொடுக்கவில்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த மலசலகூடங்கள் சுகாதார சீர்கேடாகக் காணப்படுவதாலும் நாளுக்கு பல நூற்றுக்கணக்கானோர் ஒரே மலசலகூடத்தை உபயோகிப்பதாலும் தொற்றுநோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை காணப்படுகிறது.

மேலும் மலசலகூடங்களை குத்தகைக்கு வழங்காமல் அதற்கு ஒரு கட்டணத்தையும் தேசிய போக்குவரத்து அதிகாரசபையினர் அறவிடுகின்றனர். எனினும் மலசலகூடம் பாவனைக்கு உதவாத நிலையிலேயே காணப்படுகிறது.

இதேவேளை பஸ் நிலையத்திற்கு முன்பாக பொதுமக்கள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களை நிறுத்திவிட்டு பஸ்ஸில் பயணிப்பதால் அப்பகுதியில் பல திருட்டு சம்பவங்களும் இடம்பெற்றுவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (05 - 100)

# கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலைக்கு 2000 சாதாரண தர மாணவர்களால் உதவி



(எம்.எச்.எம் சியாஜ் )

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட பிரதான கூட்ட மண்டபத்திற்கான ஒலி அமைப்பு மற்றும் மேடையின் பின்னணி திரைச்சீலை என்பவற்றை பாடசாலையின் பழைய மாணவர்களான மிலேனியம் 2000 சாதாரண தர மாணவர்களின் முழு முயற்சியால் வழங்கப்பட்டுள்ளது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.என்.எம் நஸ்றீன் மற்றும் எஸ். எப். சாஜினாஸ் தலைமையில் நடைபெற்ற மிலேனியம் 2000 சாதாரண தர மாணவர்களின் உபகரணங்கள் மற்றும் திரைச்சீலை கையளிக்கும் வைபவத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் , பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பாடசாலையின் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டதுடன் குறித்த மிலேனியம் 2000 சாதாரண தர மாணவர்களுக்கு பாராட்டுக்களையும் நன்றிகளையும் பிரதி அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் என்பன சார்பாகவும் தெரிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

# 30 கிலோ போதைப்பொருள்களுடன் கடுவலையில் ஒருவர் கைதாகினார்

30 கிலோகிராம் நிறையுடைய போதைப்பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கடுவலை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 15 கிலோகிராம் ஐஸ், 14 கிலோ கிராம் ஹாஷ் மற்றும் 941 கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் சந்தேக நபரிடமிருந்து 7 லட்சம் ஷரூபா பணமும் வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தெரிந்தவன் சாதிக்கின்றான் தெரியாதவன் போதிக்கிறான்

## வேலுகுமாருக்கு முஷாரப் பதிலடி




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாண ஆளுநர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் அரசாங்கத்தின் சலுகையாக ஆளுநர் பதவியை பெற்றுக் கொண்டு தான் சார்ந்த சமூகத்திற்கு எவ்விதமான சேவைகளையும் செய்யாமல் இருக்கிறார் என்று நாடாளுமன்றத்தில் வேலுகுமார் காட்டமாக உரையாற்றியமைக்கு திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம்.முஷாரப் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவன் என்ற வகையில் ஆளுநர் அவர்களுடைய வெற்றிகரமான செயல் திட்டங்கள் குறித்து எனது கருத்தை பதிவு செய்வது தார்மீகக் கடமையாகும் என்று கருதுகிறேன்.

மூன்று இன மக்களும் கலந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் இதுவரை எந்த ஓர் ஆளுநரும் செயற்பட்டு இருக்காத வகையில் மிகவும் வேகமாகவும் சாதுரியமாகவும் பிரச்சினைகளைக் கையாண்டு மக்களுக்கு வினைத்திறனுள்ள சேவையை ஆற்றுவதில் கிழக்கு மாகாண ஆளுநரின் தனித்திறமை போற்றத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னோடியாகவும் மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தியை திட்டமிடுவதில் அர்ப்பணிப்புடனும் புதிய சிந்தனையுடன் செயற்படும் ஆளுநர் தனது ஆளுநர் பதவியை ஒரு சலுகையாக கருதி இருந்தால் இவ்வாறு செயற்படமாட்டார். மாறாக, அதனை ஒரு வரப் பிரசாதமாக கருதி மாகாணத்தின் எல்லா துறைகளிலும் புதிய அபிவிருத்தி வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

கிழக்கு மாகாணத்துக்கு இதுவரை நியமிக்கப்பட்ட ஏனைய ஆளுநரைகளை விட விரைவாகவும் வேகமாகவும் துடிப்புடனும் செயலாற்றக்கூடிய ஓர் ஆளுநராக சேவையாற்றிக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆளுநர் பதவியை வெறும் சலுகையாக மட்டுமே பார்க்கும் வேலு குமாருடைய கருத்து மிகவும் கண்டிக்கத்தக்கது.

கிழக்கு மாகாண ஆளுநருடன் நெருங்கி பழகுபவன் என்ற அடிப்படையில் அவர் மலையக மக்களுடன் எத்தகைய ஆழமான நேசம் கொண்டுள்ளார் என்பதையும், அவர்களின் நலனுக்காக இடைவிடாது செயலாற்றி வருகிறார் என்பதையும் நான் அறிவேன்.

செந்தில் தொண்டமான் எமது நாடு பொருளாதார சிக்கலில் அகப்பட்டு செய்வதறியாது திகைத்து நின்ற போது இந்தியாவின் உதவியை பெற்றுக்கொள்வதிலும் கனிசமான பங்கேற்றார். பதவியில் இருப்பவர்களுக்கு பொதுவாக விமர்சனங்கள் வருவது இயற்கையாகும்.

அந்த வகையில் செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான் செய்யத் தெரியாதவன் போதிக்கிறான் என்பது நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் அவர்களுக்கு மிகவும் பொருத்தமானது. - என்றார். (05)

# மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

## களு கங்கையில் சம்பவம்

ஹொரணை, பொருவதண்ட பிரதேச களு கங்கையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வெள்ளிக்கிழமை மாலை களு கங்கையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளார்.

இதனையடுத்து இவர் பிரதேசவாசிகளின் உதவியுடன் காப்பாற்றப்பட்டு ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (05)

# ஐந்து கிராம் கெரோயினுடம் பெண் ஒருவர் கைதாகினர்!

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநகர் பகுதியில் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வீடு ஒன்றில் பன்னொருவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஐந்து கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# எல்ல – கரந்தகொல்ல பிரதேசத்தில் மண் சரிவு

எல்ல - கரந்தகொல்ல பிரதேசத்தில் சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக எல்ல வெல்லவாய வீதி பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (05)

# 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு தண்ணீரில் அடித்துச் செல்லப்பட் குழந்தை சாவு

*பொலன்னறுவை, வெலிகந்த பகுதியில் கால்வாயொன்றில் தவறி விழுந்த குழந்தையொன்று சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நீரில் அடித்து செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.*

*கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் வெலிகந்த பகுதியை சேர்ந்த இரண்டு வயது ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.*

*குழந்தையின் தாய் நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காகக் குழந்தையை மூத்த மகளிடம் ஒப்படைத்துள்ளார். இதன்போது குழந்தை வீட்டின் பின்புறமுள்ள வயல்வெளியில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் அருகிலிருந்த கால்வாயில் தவறி வீழ்ந்து நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளது.*

*இதனைக் கண்ட வெலிகந்த, சிங்கபுர பிரதேசத்தில் உள்ள தனியார் நெல் ஆலையொன்றின் ஊழியர் ஒருவராலும் அங்குள்ள சிலராலும், குழந்தை மீட்கப்பட்டு அவசர அம்புலன்ஸ் சேவை மூலம் குழந்தையை வெலிகந்த வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். பின்னர், வெலிகந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது குழந்தை உயிரிழந்துள்ளதாகவும், குழந்தையின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*குழந்தை நீரில் அடித்து செல்லப்பட்ட வேளை, குழந்தையின் தந்தை தோட்டத்திற்குப் பின்புறம் உள்ள மாட்டுப் பண்ணையிலிருந்ததாகவும் மூத்த சகோதரி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# ஒலுவில் துறைமுகத்தை தாரைவார்க்கும் எண்ணத்துடன் மோடியின் பிரதிநிதியை கிழக்குக்கு அழைத்துவரவேண்டாம்

## இந்தியத் தூதரின் வருகைக்கு கலிலூர் ரஹ்மான் போர்க்கொடி

(சலீம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற பாதுகாப்பு மற்றும் பொருளாதார மையங்களை அண்மைய நாடொன்றுக்கு வழங்குவதற்கு ஒருசில அரசியல் கட்சிகள் முயற்சிப்பதை தேசப்பற்றுள்ள இலங்கையர்களாக ஒன்றிணைந்து நாம் முறியடிக்க வேண்டும். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் நமது அண்டை நாடான இந்தியாவை அண்மித்த மாகாணங்களாகும்.

எனவே, அந்த மாகாணங்களில் இத்தகைய பாதுகாப்பு மற்றும் பொருளாதார மையங்களை அபிவிருத்தி செய்ய அல்லது பராமரிக்க போகின்றோம் என்ற தோரணையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பது புத்திசாலித்தனம் அல்ல. அது இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்தாகும் என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் துறைமுகத்தால் அண்மைய பிரதேசங்கள் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு துறைமுகமும் ஒழுங்காக இயங்க முடியாமல் உள்ள சூழ்நிலையை சீரமைக்க இலங்கை அரசாங்கமும், கிழக்கு மாகாண ஆளுநரும் அலட்சியப்போக்கில் உள்ளமையைக் காரணமாக வைத்து அந்த துறைமுகத்தை சீரமைக்கும் நோக்கில் இந்திய உயர்ஸ்தானிகர் கிழக்குக்கு விஜயம் செய்து குறித்த துறைமுகம் தொடர்பில் ஆய்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என ஊடக செய்திகளினூடாக அறிந்து கொள்ள முடிந்தது.

எதிர்காலத்தில் இந்தத் துறைமுகத்தை அண்டை நாடான இந்தியாவுக்குக் கொடுப்பதற்காக ஒலுவில் கடலை அழிக்க பொறுப்பான அதிகாரிகள் குழு எவரேனும் சதி செய்கிறார்களா? என்பதை அரசாங்கம் பரிசீலித்து, இந்தத் துறைமுகத்தை இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் எடுத்து, அபிவிருத்தி செய்து, அதனை முதலீட்டு திட்டங்களுக்குத் திறந்து, அங்கு வாழும் மக்களுக்கு ஆபத்துக்களோ நாட்டின் இறையாண்மைக்கு பங்கமோ வந்துவிடாத வகையில் பாரபட்சமில்லாது வெளிநாட்டுத் திட்டத்திற்கு கையளிப்பதில் முஸ்லிம் சமூக அரசியல் இயக்கம் என்ற வகையில் எமக்கு ஆட்சேபனை இல்லை.

வடக்கு கிழக்கில் அண்டை நாடான இந்தியாவுக்கு நிறைவான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நாட்டின் வடக்கு மற்றும் மலையக பிரதேசங்களிலும் இந்தியாவுக்கு வழங்கப்படும் பெரும் மரியாதை போதுமானது. இந்தியாவை மேலும் கௌரவிக்க வேண்டும் என்றால்,



புவியியல் ரீதியாக இலங்கையின் கிழக்கில் கொடுக்காமல் தெற்கு, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் கொடுப்பது நல்லது என்பது எங்களின் கருத்தாக உள்ளது.

எமது இலங்கை மண்ணுக்குள் இந்திய அமைதிப் படை நுழைந்து செய்த அநியாயங்கள், பலாத்காரமாக திணித்த மாகாண சபை முறையான வெள்ளை யானையால் இந்தியாவைக் கண்டு நாம் மிகவும் பயப்படுகிறோம். இலங்கை உள்நாட்டு போரின் போது இந்தியா கடைபிடித்த ராஜதந்திர விடயங்கள், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியின் அறிக்கையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட கருத்துக்கள் இந்தியா தொடர்பில் எங்களுக்கு மேலும் அச்சத்தைக் கொடுத்துள்ளது. அதனாலேதான் இந்த நிலைப்பாட்டுக்கு நாங்கள் வரவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாங்கள் கடந்த காலங்களில் பாரத தேசமான இந்தியாவை நேசித்தோம். நாங்கள் முகலாயப் பேரரசை ஏற்றுக்கொண்டோம். எனினும், தற்போதைய இந்திய ஜனாதிபதி நரேந்திர மோடி மற்றும் அவரது குழுவினர் நாட்டின் சிறுபான்மை சமூகத்தின் மீது காட்டும் அக்கறையாலும், தற்போதைய தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்தை அவமானப்படுத்தும் வகையில் பேசியதாலும், முஸ்லிம் சமூகம் வாழும் கிழக்கு மாகாணத்தில் இந்திய பிரவேசத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. போன்ற காரணங்கள் ஏராளமாக உள்ளது.

எனவே முஸ்லிம் சமூகத்தை அவமரியாதை செய்யும் ஒரு நாட்டின் அரச தலைவருக்கு எதிராக அறிக்கை விடாமல் பயந்து அவர்களுக்கு அடிபணிந்து இருக்கும் அரசியல்வாதிகள் அந்த நாட்டின் தூதுவரை கிழக்கு மாகாணத்திற்கு அழைக்க வேண்டாம் என கிழக்கு மாகாணத்தில் அரசியல் செய்யும் அரசியல் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம். கிழக்கின் உரிமைகள், சொத்துக்கள், இருப்புக்கள், பாதுகாப்பு தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் மத, அரசியல் மற்றும் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் விழிப்புடன் இருக்குமாறும் இவ்வாறான காட்டிக்கொடுப்புக்களுக்கு எதிராக எழுந்து நின்று குரல் கொடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.- என்று தெரிவித்துள்ளார். (05)

## சித்திரை விளையாட்டு விழாவில் பன்னாங்கு பின்னுதல் போட்டி





( வி.ரி.சகாதேவராஜா)

இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலகம் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா நேற்று (சனிக்கிழமை) காலை ஆரம்பமாகியது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில்

காலை 6 மணியளவில் மரதன் ஓட்டம் கண்ணகையம்மன் கோவில் முன்றிலில் ஆரம்பித்து வீரபத்திரர் ஆலய முன்றிலில் நிறைவு பெற்றது.

தொடர்ந்து காலை நேர நிகழ்வுகளாக கோலம் போடுதல், பன்னாங்கு பின்னுதல், குருத்தோலை பின்னுதல் போன்ற நிகழ்வுகள் நடந்தன.

மாலையில் பிரதான பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்துசிறப்பிக்க உள்ளார். (05)

## எமது தாய்மார்கள் நாளை என்ன செய்வது என்ற ஏக்கத்துடனேயே வாழ்ந்து மரணிக்கின்றனர்

### எஸ்.எம்.சபீஸ் வேதனை

நூருல் ஹுதா உமர்



வருமான ஏற்றத்தாழ்வு வாழ்வியலை சிதைத்துக்கொண்டிருந்தாலும் வருமானமே இல்லாமல் நாளை என்ன செய்வது என்ற வேதனையுடன் எமது சகோதரிகள் வாழ்க்கையை வாழாமலேயே முடித்துவிடுகின்றனர் என அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

பெண்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் -

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நாளை வருமானத்துக்கு என்ன செய்வது என்ற அச்சம் மிகவும் அரிதான மட்டத்தில் காணப்படுகின்றது. அம்மக்களுக்கு தேவையான வருமானத்தை ஈட்டுவதற்கான அனைத்து வழிமுறைகளையும் அந்நாட்டு தலைவர்கள் பாதுகாத்து வருகின்றனர். எமது நாடோ முறையான தலைவர்கள் இல்லாமையால் இன்னமும் நம்மில் பெரும்பாலானோர் உயிர் வாழ்வதற்கே கஷ்டப்பட வேண்டிய சூழலில்தான் இருந்துகொண்டிருக்கிறோம்.

குறிப்பாக நமது பிரதேசங்களில் நாளைய எமது வாழ்வாதாரத் தேவைக்கான வருமானத்தையும் குழந்தைகளின் நிலைமையையும் சிந்தித்து வேதனைப்பட்டவர்களாகவே வாழ்ந்து மரணிக்கும் நிலையை பெரும்பாலான சகோதரிமார்கள் அனுபவிக்கின்றனர்.

இவற்றுக்கெல்லாம் விடிவு வரவேண்டும்மென்றால் முதலில் நீங்கள் மாறவேண்டும். மக்களைப் பற்றிய நாளைய எதிர்கால சந்ததிகள் பற்றிய சிந்தனைகள் இல்லாமல் மக்களின் வாழ்வியலைப் பற்றி தெரியாமல் மக்களைப்பற்றி சிந்திக்காமல் தனது குடும்பத்தைப்பற்றி மாத்திரமே சிந்திப்பவர்களை நீங்கள் தெரிவுசெய்துவிட்டு நாம் நிம்மதியாக வாழவேண்டும் என்று நினைக்க முடியாது. - எனத் தெரிவித்தார். (05)

## பண மோசடிக் குற்றச்சாட்டில் கைதானவருக்கு மறியல்

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு தெஹியத்தகண்டிய நீதீவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மொனராகலை தொம்பகஹவெல பகுதியில் வசிக்கும் கொரிய மொழி தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவரையே எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது . சந்தேகநபர் பொலன்னறுவை, நுவரகல மற்றும் சிறிபுர பிரதேசங்களைச் சேர்ந்த மக்களிடம் 10 லட்சம் ஷரூபா மோசடி செய்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சந்தேக நபர் வேறு பிரதேசங்களிலும் பணம் மோசடி செய்துள்ளாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)


SpiceJet
SpiceJet
Red. Hot. Spicy.
VANAKKAM
சென்னை
இரு வழி கட்டணம் (RT FARE)
LKR 45,500
ஒரு வழி கட்டணம் (OW FARE)
LKR 36,400
கொழும்பில் இருந்து சென்னை
நேரடி விமானங்கள்
29 நவம்பர் 2023
முதல் தொடங்குகிறது
FREE
30KG+7KG
BAGGAGE ALLOWANCE
Jetwing
AIR
தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்
JETWING HOUSE II - LEVEL 1,
46/21 NAVAM MAWATHA COLOMBO 02
PHONE: +94 11 473 2400
RUKSHAN
+94 77 790 2118
rukshanm@jetwing.lk
SHAFWAN
+94 74 352 9047
shafwan@jetwing.lk

காலைக்கதிர் Kalaikkathir

# தேசிய கணித ஒலிம்பியாட் போட்டிக்கு மல்வத்தை மாணவிகள் தெரிவாகினர்








(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை கல்வி வலயத்திலிருந்து இம்முறை தேசிய மட்ட ஒலிம்பியாட் (கணிதம் ) போட்டிக்கு இரு மாணவிகள் தெரிவாகியுள்ளனர் என கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எம்.எம். ஜெளபர் தெரிவித்தார்.

மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சிவஷரூபன் ஜினோதிகா மற்றும் ரி.மதுஸ்கா ஆகிய மாணவிகள் தெரிவாகி சாதனை படைத்துள்ளனர்.

பாடசாலையின் அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தலைமையில் பாடசாலை காலை ஒன்றுகூடலில் சாதனை மாணவிகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிழக்கில் மல்வத்தை திருவள்ளுவர் புரத்தைச் சேர்ந்த செல்வி சிவஷரூபன் ஜினோதிகா என்ற மாணவி கணிதம் மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் தொடர்ச்சியாக சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# கடலரிப்பை உடனே தடுங்கள் இல்லையேல் பதவி விலகுக

## அம்பாறை மாவட்ட எம்.பி.க்களிடம் யஹியாகான் வேண்டுகோள்

(ஏ.எஸ்.மௌலானா)

ஜனாதிபதிக்கு கை கொடுப்பதை விடுத்து சாய்ந்தமருது உட்பட அம்பாறை மாவட்ட கடலோர மண்ணரிப்பைத் தடுக்க நிரந்தர திட்டமொன்றை செயற்படுத்துங்கள் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெயிட்டுள்ள அறிக்கை ஒன்றின் மூலமாக யஹியாகான் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் - சாய்ந்தமருது பகுதி கடலரிப்பு உட்பட மாவட்டக் கடலரிப்பு தொடர்பில் நான் உட்பட பலரும் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனால் எதுவித நிரந்தர தீர்வும் இதுவரை எட்டப்படவே இல்லை.

தேசிய காங்கிரஸ் தலைவரும் அண்மையில் சாய்ந்தமருதில் கடலரிப்பை தடுத்து விட்டது போன்று வீடியோ, புகைப்படம் எடுத்து வெளியிட்டிருந்தார். ஆனால் அதுவும் தீர்வாக அமையவில்லை. அங்கும் இங்குமாக கல் போடுவது என்பது வெறும் கண்துடைப்பான செயற்பாடாகவே காணப்படுகிறது.



ஜனாதிபதியுடன் கைலாகு கொடுத்து அருகில் நின்று புகைப்படம் எடுக்கும் மாவட்ட எம்.பி.க்கள் சாய்ந்தமருது கடலரிப்பை தடுக்க ஆர்வம் காட்டுவதில்லை ஏன் என்ற கேள்வி மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது. இவ்வாறு கைகொடுக்கும் சந்தர்ப்பத்திலாவது இந்த கடலரிப்பு குறித்து ஜனாதிபதியிடம் தெளிவாகப் பேசியிருக்க முடியும்.

அம்பாறை மாவட்ட எம்.பீக்களே, ஜனாதிபதியை இவ்வாறு தனித்தனியாக சந்திப்பதை விடுத்து கட்சி ரீதியாக அல்லது மாவட்ட எம்.பீக்கள் அனைவரும் ஒன்றுபட்டு மு.கா. தலைவர் ஹக்கீமுடன் சென்று சந்திக்க முடியுமாக இருந்தால் இன்னும் வலுவாக இருக்கும். தனித்தனியாக சென்று சந்திப்பதால்தான் சகல அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் இடைநடுவில் நிற்கின்றன என்பது மக்களின் ஆதங்கமாக இருக்கின்றது.

கடலரிப்பு காரணமாக மீனவ சமுகம் மட்டுமன்றி முழு மக்களுமே மாவட்ட எம்.பிக்களுடன் கடும் ஆவேஷத்துடன் இருக்கின்றனர். இந்த எம்.பீக்களைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஆத்திரம் மக்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது.

தயவுசெய்து சாய்ந்தமருது பிரதேச கடலரிப்பு உட்பட மாவட்ட கரையோர கடலரிப்பைத் தடுக்க நிரந்தர முயற்சி செய்யுங்கள். இல்லையேல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்யுங்கள்.

அரசாங்கத்தில் அம்பாறை மாவட்ட எம்.பிக்களுக்கு இன்று நல்ல செல்வாக்கு உள்ளதாக பரவலாகப் பேசப்படுகின்றது. அதைப் பயன்படுத்தியாவது தலைவர் ஹக்கீமின் தலைமையில் ஜனாதிபதியை சந்தித்து தீர்வைப் பெற முயற்சி செய்யுங்கள் -என்று அந்த அறிக்கையில் யஹியாகான் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

## 30 கிலோ போதைப்பொருள்களுடன் கடுவலையில் ஒருவர் கைதாகினார்



30 கிலோகிராம் நிறையுடைய போதைப்பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பியகம பொலிஸார் தெரிவித்தனர்.

பியகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கடுவலை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 15 கிலோகிராம் ஐஸ் , 14 கிலோ கிராம் ஹாஷ் மற்றும் 941 கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் சந்தேக நபரிடமிருந்து 7 லட்சம் ரூபா பணமும் வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பியகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கிண்ணியா கண்டலடி ஊற்று கரையோர பகுதியில் கண்டல் தாவரம் நடும் நிகழ்வு







(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குப்பட்ட அல் - றவ்ழா இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த 25 ஆம் திகதி அல் - றவ்ழா இளைஞர் கழக கண்டல் தாவர அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டம் கண்டலடி ஊற்று அல் - றவ்ழா பாடசாலைக்கு முன்பாக உள்ள கரையோரப் பகுதிகளிலேயே இந்தக் கண்டல் தாவரம் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக மூன்றாவது நாள்களாக நேற்றும் (சனிக்கிழமை) கண்டல் தாவரங்கள் நடப்பட்டன.

இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம்.கனி, கிண்ணியா நகர சபை செயலாளர் எம். கே.அனீஸ், இளைஞர் சேவை அதிகாரி ஏ.டபிள்யூ.எம். ஜிப்ரி, கிண்ணியா பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் என்.நுஸ்ரி,

கிண்ணியா நகர சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்,கிண்ணியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,பெரண்டினா நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்,கண்டலடிஊற்று பள்ளிவாயல் நிர்வாகிகள்,பொது மக்கள்,அல் - றவ்ழா இளைஞர் கழக உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த திட்டத்திற்கு அரச சார்பற்ற நிறுவனமான பெரண்டினா மற்றும் ர்ளுடீஊ வங்கி நிதி உதவி வழங்கியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். கரையோரத்தை பாதுகாக்கவும் கடலரிப்பு போன்றவற்றை தடுக்கவும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கல்லாறில் வாழ்வாதாரத்திற்கு வழங்கிய மிளகாய் தோட்டத்தை அழித்த கும்பல்







கிளிநொச்சி கண்டாவளை கல்லாறு பகுதியில் இயங்கிவரும் சட்டவிரோத குழுஒன்றால் பெண் தலைமைத்துவக் குடும்பம் உள்ளிட்ட இருவருக்கு வழங்கிய வாழ்வாதார மிளகாய் தோட்டம் ஒன்று வெள்ளிக்கிழமை இரவு அழிக்கப்பட்டுள்ளது.

அன்றிரவு 10 மணிக்கு பின்னர் இருவருக்குச் சொந்தமான ஓர் ஏக்கர் பரப்பளவு கொண்ட மிளகாய் தோட்டத்திற்குள் நுழைந்த குறித்த சட்ட

விரோத குழு வினர் காய்க்கும் நிலையில் காணப்பட்ட மிளகாய்ச் செடிகளை பிடுங்கி எறிந்ததோடு, தூவல் முறை நீர் விநி யோக குழாய்களை உடைத்தும் , வெட்டியும்

சேதப்படுத்தியுள்ளனர். பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கும் பிறிதொரு குடும்பம் ஒன்றுக்கும் நிறுவனம் ஒன்றால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவி திட்டத்தின் கீழ் பல லட்சங்கள் செலவு செய்துமேற்கொள்ளப்பட்ட மிளகாய் பயிர்ச் செய்கையே குறித்த சட்டவிரோத குழுவால் அழிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தமது வாழ்வாராத்தை இழந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. - என்றனர்.

(05)

# அமெரிக்காவை ஆட்டிப் படைக்கும்......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

டிக் டாக் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. டிக் டாக்கின் மற்றொரு வடிவமான லெமன்8 செயலியும் அமெரிக்க சமூக வலைதள பயனாளிகள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அந்நாட்டில் தங்கும் விடுதிகள், உணவு, பேஷன் பொருள்கள், நவீன ஆடைகள் விற்பனை, சுற்றுலா என பல்வேறு துறைகளில் லெமன்8 ஆதிக்கம் செலுத்தி வருகிறது. டிக் டாக் தடை செய்யப்படும்போது இந்த செயலியும் வெளியேற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

அமெரிக்க நிறுவனங்களின் யூடியூப் சார்ட்ஸ், இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் ஆகியவற்றைவிட டிக் டாக் அமெரிக்காவில் மக்களை வெகுவாகக் கவர்ந்த, அதிகம் பயன்படுத்தப்படும் செயலியாக உள்ளது.

எனவே, டிக் டாக் செயலியின் தடை அமெரிக்காவில் குறிப்பிடத்தக்க மக்களின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை மறுப்பதற்கில்லை. இது இளைஞர்கள் மத்தியில் அரசு குறித்த அதிருப்தியையும் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்க அரசின் முடிவை எடுத்து சட்டப் போராட்டத்துக்கு டிக் டாக் தயாராகி வருகிறது. தங்களைத் தவிர மற்ற யாரிடமும் சிறந்த தொழில்நுட்பம் இருக்கக் கூடாது என்ற அமெரிக்காவின் எண்ணத்தின் காரணமாகவே டிக் டாக்கை அபகரிக்க முயற்சிப்பதாக அந்நிறுவனம் குற்றம்சாட்டியுள்ளது. இந்த விவகாரம் அமெரிக்கா-சீனா இடையிலான மற்றொரு பனிப்போராக உருவெடுத்துள்ளது.

நன்றி: தினமணி

# சாதரண தர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் செயலமர்வு

(எம்.எச்.எம் சியாஜ்)

இந்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் கற்பிட்டி கோட்டத்தில் உள்ள கிராமப்புறப் பாடசாலைகளான நரக்களி, மாம்புரி, நாவற்காடு, தேத்தாப்பளை மற்றும் நாயக்கர் சேனை ஆகிய பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்ட தமிழ், விஞ்ஞான, வரலாறு ஆகிய பாடங்களுக்கான இலவச வழிகாட்டல் செயலமர்வு அண்மையில் நாவற்காடு மற்றும் நரக்கள்ளி பாடசாலைகளில் இடம்பெற்றது.

கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி என்.எம்.ஆர்.தீப்தி பர்ணாந்துவின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த இலவச செயலமர்வில் கற்பிட்டி கோட்ட தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி றிஸ்மியா, கற்பிட்டி கோட்ட விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.எம்.சாஹிர் , தேத்தாப்பளை பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியர் எம்.கியாஸ், பிரதான வளவாளர்களாகக் கலந்து கொண்டார்.

இதேவேளை கல்பிட்டி கோட்ட விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.எம்.சாஹிர் மற்றும் தேத்தாப்பளை பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியர் எம்.கியாஸ் வரலாறு பாடத்துக்கான செயலமர்வு புத்தளம் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் எம். றியாஸ் ஆகியோர் இணைந்து இச்செயலமர்வுகளை நாவக்காடு மற்றும் நரக்கள்ளி பாடசாலைகளில் நடத்தினர்.

புத்தளம் தமிழ் அதிபர்கள் சங்கம் இம்மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான மற்றும் ஆங்கில பாட மாதிரி வினாத்தாள்களை மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்துடன் இணைந்து வழங்கியது.

மேற்படி செயலமர்விற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அதிபர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதாகவும், வளப்பற்றாக்குறைகள் நிலவும் இப்பாடசாலைகளுக்கு இவ்வாறான செயலமர்வுகள் அரிய வாய்ப்பு எனவும் மாம்புரி ரோமன் கத்தோலிக்க சிங்கள தமிழ் மகா வித்தியாலய பிரதி அதிபர் மெரிய லாவுஸ் மேர்ஸி தெரிவித்தார்.

(05)

# காணாமல் போன உறவுகள் ஆணைக்குழு முன்னிலையில் தம்பலகாமத்தில் சாட்சியம்





(ஹஸ்பர் ஏ.எச்)

காணாணல்போனோர் ஆள்கள் பற்றிய அலுவலகத்தால் காணாமல் போனோர்களின் உறவினர்களால் சாட்சியமளிக்கும் விசாரனை நேற்று (சனிக்கிழமை) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

கடந்த யுத்த காலத்தின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அது தொடர்பான கொழும்பில் இருந்து வருகை தந்த ஆணைக்குழு முன்னிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம், கந்தளாய், திருகோணமலை பட்டினமும் சூழலும், மொறவெள ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளை சேர்ந்த சுமார் 48 உறவுகளுக்காக விசாரனைக்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதில் திருகோணமலை சார்பாக 16 , கந்தளாய் 06, மொறவெள 04, தம்பலகாமம் 22 என விசாரனைகளுக்காக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக அழைப்பு விடுக்கப்பட்டன. இவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பு இடம் பெற்றன.

இதில் காணாமல் போன அலுவலக தவிசாளர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாண பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்கள், தம்பலகாமம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் இணைந்து விசாரனைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சி நகரை சுத்தமாக்கும் பணி

கிளிநொச்சி நகரை சுத்தமாக்கும் பணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. பொலிஸார், இராணுவத்தினர், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர், தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், திணைக்களங்களின் பங்களிப்புடன் கிளிநொச்சி நகரை சுத்தமாக்கும் பணி நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது. (05 - 316)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.04.2024இல் வெளியிடப்பெற்றது